தமிழக சட்டப் பேரவை

வியாழக்கிழமை, 1967 ஜூலை 13.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் வினாக்கள்-விடைகள். 296 எண்ணுள்ள வினா தள்ளிவைக்கப்படுகிறது.

இலவசப் படிப்பு.

*297 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆரம்பக் கல்வி முதல் கல்லூரிப் படிப்பு வரை உணவு-உடை-புத்தகம் முதலிய சகல விதமான பொறுப்புக்களையும் சர்க்காரே ஏற்று, படிக்க வைக்கும் உத்தேசமுண்டா ?

(இ) ஆம் எனில், எப்போதிருந்து அமுலில் வரும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : இப்பொழுது மிகவும் பின்தங்கிய ஏழை மக்களாகியவர்களுடைய குழந்தைகளை படிக்க வைக்க வேண்டும் என்று தான் நாம் உதவித் தொகைக் கொடுப்பதாக இருந்தாலும், மேற்கொண்டு அவர்களுக்கு எவ்வளவோ பணம் செலவு ஆகக்கூடிய நிலைமை இருக்கிறது, விலைவாசி உயர்ந்திருக்கக்கூடிய இந்த நேரத்திலே. ஆகவே தான் இன்று அவர்களுக்கு எல்லாமே இலவசமாக இல்லை என்று சொன்னாலும், ஹாஸ்டலுக்கு ஆகக்கூடிய செலவுத் தொகையையும், புஸ்தகங்களுக்கு வேண்டிய செலவுத் தொகையையும் மட்டுமாவது சர்க்கார் ஏற்றுக்கொள்ள உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட உத்தேசம் இப்பொழுது இல்லை. சாதாரணமாக துவக்கப் பள்ளிகளில் மதிய உணவு தருவதற்கு ஏற்பாடுகள் நடந்துகொண்டு வருகின்றன. சீருடையைப்பொறுத்த வரையில் ஆங்காங்கு நன்கொடைகள் அவர்களாகவே வழங்கும் முறை கையாளப்பட்டு வருகிறது. அரசாங்கம் கல்விக்காக ரூ. 54 கோடி செலவழித்தாலும், கல்விப் பயிற்சி அளிக்கக்கூடிய அத்தகைய முயற்சிகளை மேற்கொள்வதற்குப் போதுமான அளவில் இன்னும் செலவிடப்படவில்லை என்ற குறைபாடு இருந்துகொண்டிருக்கிறது. இந்த நிலையிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய யோசனை நிதி வசதி இல்லாத காரணத்தினால் இப்பொழுது இல்லை ; நிதி வசதியைப் பொறுத்துத்தான் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

*298 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சர்க்கார் சிப்பந்திகளின் பிள்ளைகளுக்கு கல்லூரிப் படிப்புப் படிக்க ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுகிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : மாதம் ரூ. 200 சம்பளத்திற்கு உட்பட்டவர்களுக்காவது இது போன்ற உதவியைச் செய்ய இனிமேலாவது ஏற்பாடு செய்ய உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதுவரையில் ரூ. 1,500 வரையில் தான் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கும் பிற்பட்ட வகுப்பினர்களுக்கும் அரைச் சம்பளம் என்ற வகையில் சலுகை இருந்துவந்தது : தாழ்த்தப்பட்டவர்கள், பிற்பட்ட வகுப்பினர், பழங்குடி மக்கள் ஆகியோர்களைப் பொறுத்து, ரூ. 2,000 என்ற அளவுக்கு இந்தச் சலுகை வரம்பு இந்த ஆண்டு தான் உயர்த்தப்பட்டிருக்கிறது. மற்ற வகுப்பினர்களுக்குப் பொருளாதார அடிப்படையில் ரூ. 1,500 என்ற அடிப்படையில் இந்த ஆண்டு தான் பி. யூ. ஸீ.யில் இலவசச் சம்பள வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் இப்பொழுது அதை உயர்த்துவதாக இல்லை.

* 299 வினா.—**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்குக் கல்லூரி வரை இலவச கல்விச் சலுகை அளிக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு வி. கே. கோதண்டராமன் : ஏற்கனவே ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கு சகல துறைகளிலும் உதவி தருவதாக சொல்லப்பட்டு வந்தது. ஆக, இப்பொழுது இல்லை என்று சொன்னாலும், இனிமேலாவது அதை கணக்கில் எடுத்துக்கொண்டு அந்த ஏழை ஆசிரியர்களுடைய குழந்தைகளைப் படிக்க வைத்து முன்னுக்கு கொண்டு வருவதில் கவனம் செலுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முதலில் கூறியபடி 1,500 ரூபாய்க்கு உட்பட்டு வருமானம் வருபவர்களுக்கு இந்த இலவசக் கல்விச் சலுகை கிடைக்கக்கூடும். ஆனால், இப்படி ஆசிரியர்களை மட்டும் எடுத்துக்கொண்டால், இதுபோன்று பல்வேறு தரத்தினர்கள் இருக்கிறார்கள். உதாரணமாக பொற்கொல்லர் வகுப்பினர், கைத்தறி நெசவாளர்கள் என்று பல்வேறு தரத்தினர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கும் பொழுது எல்லா மக்களுக்கும் இலவசக் கல்வி என்ற நிலை வரும்பொழுது தான், இந்த யோசனை பொருந்தி வருமே தவிர, ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டு பார்த்தால் நிதி வசதி இடம் கொடுக்காத நிலைதான் இருக்கும்.

திரு. கே. விநாயகம் : ஆசிரியர்கள் தான் நாட்டிலிருக்கிற கல்லாமையை ஒழிப்பதற்குக் காரணமாக இருக்கின்ற கருவிகளாக கருதப்படுகிறார்கள். அவர்கள் குழந்தைகள் பள்ளிகளில் இலவசமாக படிக்கமுடியாத அவல நிலை நம்முடைய அரசாங்கத்திற்கு வந்து விட்டதா ? அறியாமையை போக்குவதற்குக் காரணமாக இருக்கிறார்களே அவர்களுடைய பிள்ளைகள் படிப்பதற்கு வேண்டிய பொருளாதார வசதி, அது உடையாக இருந்தாலும் சரி. புத்தகமாக இருந்தாலும் சரி, கல்லூரி, பாடசாலை கட்டணம், சம்பளமாக இருந்தாலும் சரி, இலவசமாக எல்லா ஆசிரியர்களுக்கும் (ஃப்ரம் தி எலிமென்டரி ஸ்கூல் டீசர் அப் டு தி காலேஜ் லெவல்) செய்துகொடுப்பதற்கான ஒரு தனித் திட்டத்தை இனியாகிலும் தீட்டுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆசிரியர்களுக்கு அவர்கள் பார்க்கிற வேலைக்கு ஊதியம் தரப்படும் நிலைமையும் கவனிக்கப்பட்டு வருகிறது. அதைப் பொறுத்து இதே நிலையில் இருப்பவர்கள் சமுதாயத்தில் பல்வேறு தரத்தினர், வகையினர் இருக்கிறார்கள். அப்படிப் பலரையும்